# கலை உலகில் அருகிவரும் ஸ்வரஜதியின் ஆரம்ப நிலையே ஜதிஸ்வரம்

கிருபாசக்தி கருணா
இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.
kkaruna67@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம் :**

தென்னக இசை என்கின்ற கர்நாடக சங்கீதத்தின் இரு கண்களாக விளங்குபவை கல்ப்பித சங்கீதமும், மனோதர்ம சங்கீதமும் ஆகும். கல்ப்பித சங்கீதம் என்பது இசை வல்லுனரால் முன்னரே இயற்றப்பட்ட அனைத்து இசை உருப்படி வகைகளையும் குறிக்கும். ஆரம்ப பாடங்களான ஸ்வரவரிசைகள், ஜண்டை வரிசைகள், மேல்ஸ்தாயி வரிசைகள், கீழ்ஸ்தாயி வரிசைகள், தாட்டு வரிசைகள், அலங்காரங்கள், கீதம், ஜதிஸ்வரம், ஸ்வரஜதி, வர்ணம் உட்பட கீர்த்தனை, கிருதி, பதம், ஜாவளி, இராகமாலிகை, தில்லானா ஆகிய அனைத்து இசைவடிவங்களும், கல்ப்பித இசையைச் சேர்ந்தவை. மனோதர்ம இசையில் இராக ஆலாபனை, தானம், நிரவல், கற்பனாஸ்வரம் என்பவை அடங்கும். இசைகளின் சேர்க்கை மனோதர்மத்தில் பல்லவியாகப் பாடப்படுகிறது. மனோதர்ம இசை அவர வர் பயிற்சிக்கேற்பவும், வித்துவத்திற்கேற்பவும் தத்த மது கற்பனையில் பாடப்படுகிறது. மேற்கூறிய கல்ப் பித இசையில் ஜதிஸ்வரம், ஸ்வரஜதி ஆகியன கீதத் திற்குப் பின்னர் கற்பிக்கப்படும் உருப்படிகளாகும். இவ் உருப்படிகளுக்கு உள்ள இலட்சணங்களுக்கும் இவற் றின் அமைப்புக்களுக்கும் நிறைய முரண்பாடுகள் காணப் படுவதால் சில வரையறைகளைக் கொடுப்பதே இவ் ஆய்வின் குறிக்கோளாகும். நூல்கள் மூலமாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு முறைமை மூலம் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் இரு உருப்படிகளுக்கும், வேறு வேறு இலட்சணங்கள் நூல்களில் காணப்பட்டாலும், ஒரே ஸ்வரத்தொகுதி வேறு வேறு நூல்களில் ஜதிஸ்வரம், ஸ்வரஜதி என்று குறிப்பிடப்பட்டுள்ளமை, ஒரு ஸ்வரத் தொகுதி ஒரு நூலில் ஜதிஸ்வரம் என்றும், அதே அமைப்பு சாகித்தியத்துடன் சேர்ந்து வேறு நூலில் ஸ்வரஜதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமை, வேறு நூலில் ஒரு உருப்படியின் ஒரு அங்கமாக ஸ்வரஜதி அமைக்கப்பட்டுள்ளமை, ஏராளமான ஸ்வரஜதிகள் இருக்கின்றபோதும், ஓரிரு ஸ்வரஜதிகளே இசைப் பயிற்சியிலும், நாட்டியப் பயிற்சி, அரங்கிலும் பயன்படுத்தப்படுகின்றமை ஆகிய பிரச்சி னைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றிற்கு முடிவு காணும் முகமாக ஒரே ஸ்வர அமைப்பு ஜதிஸ்வரத்திற்கும் ஸ்வரஜதிக்கும் கொடுக்கப்படலாம் என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** ஜதிஸ்வரம், ஸ்வரஜதி, ஸ்வரம், சாகித்தியம், ஜதி

## 1. ஆய்வு அறிமுகம் :

கலைச் சிறப்பில்லாத காலகட்டம் மனிதனின் மங்கிய வரலாறாகக் காணப்படுகின்றது. ஒரு சமுதாயத்திலுள்ள மனித நாகரிகத்தின் சிறப்பையும், பண்பாட்டுத் தன்மை களையும் கலைகளைக் கொண்டு அறியலாம். கலை களைப் பற்றிய விளக்கம் தரும் டி. வி. நாராயணசாமி கலை என்பது மக்களது வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி என்று எடுத் துக் காட்டுகின்றார். மக்கள் வாழ வளர சமுதாய நீதிக ளையும், அறத்தத்துவங்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிட கலைகளைப்போல் வேறு சாதனம் இல்லை என்றும் கூறுகின்றார்.[1] இவ்வாறான கலைகள் அறுபத்து நான் காகப் பகுக்கப்பட்டு உள்ளன. இவற்றுள் இசைக்கலை சிறப்புடைய கலைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## 2. இசைக்கலை

ஒலியின் அடிப்படையில் அமைவது இசைக்கலை. இசைக்கு விளக்கம் தரும் ச. வே. சுப்பிரமணியன் பின் வருமாறு கூறுகிறார். செவிவழிபுகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களை இசையவும், பொருந்தவும் வைக் கின்ற பொழுது இசை ஒலிகள் இசை என்ற பெயரைப் பெறு கின்றன.[2]

தொடக்க காலத்தில் தமிழர் இசையானது இலக்கணம், இலக் கியம் என்ற இரு பாகுபாடுகளைக் கொண்டிருந்தது. பஞ்சமரபு என்ற இசைத்தமிழ் நூலும், கூத்தநூல் என்ற நாடகத்தமிழ் நூலும், இன்று தமிழிசையில் இலக்கண நூலாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றைவிட இயற் றமிழ் நூல்களான தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை ஆகியவற்றிலுள்ள இசைக்குறிப்புக்களும், இளங்

கோவடிகளின் சிலப்பதிகாரத்திலுள்ள இசைச் செய்திகளும், நிகண்டு நூல்களும் இசைத்தமிழின் இலக் கணக் கருவூலங்களாக திகழ்கின்றன.

**3. ஆய்வுப்பிரச்சினை :**

ஜதிஸ்வரம், ஸ்வரஜதி ஆகிய இரண்டு உருப்படிகளுக்கும் வேறு வேறு இலட்சணங்கள் இருக்கின்றபோதும், ஆய்வாளரால் பின்வரும் பிரச்சினைகள் முன் வைக்கப்படுகின்றன.

- வேறு வேறு நூல்களில் ஒரே ஸ்வர அமைப்பு ஜதிஸ்வரம், ஸ்வரஜதி என இரு பெயர்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- ஒரு நூலில் ஸ்வரத்தொகுதி ஜதிஸ்வரம் என்றும், அதே ஸ்வரத்தொகுதி சாகித்தியத்துடன் சேர்ந்து வேறு நூலில் ஸ்வரஜதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- வேறு நூலில் தனியாக ஸ்வரஜதி இயற்றப்படாமல் பதவர்ணத்தின் ஓர் அங்கமாக ''ஸ்வரஜதி'' கொடுக்கப்பட்டு உள்ளமை.
- ஸ்வரஜதி என்ற பெயர் பொருத்தமில்லாது இருக்கின்றமை.
- ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறந்த ஸ்வரஜதிகள் இருந்தும், இசைப்பயிற்சியில் ஓரிரு ஸ்வரஜதிகளையே பயன்படுத்தலும். நாட்டியப் பயிற்சியிலும், அரங்கிலும் ஸ்வரஜதி வழக்கிலிருந்து அருகும் நிலை காணப்படுதலும்.

**4. கருதுகோள் :**

- ஒரே ஸ்வர அமைப்பு ஜதிஸ்வரத்திற்கும் ஸ்வரஜதிக்கும் கொடுக்கப்படலாம்.
- ஆனால் சாகித்தியத்துடன் இணைந்ததை ஸ்வரஜதி என்று கூறுவதே பொருந்தும்.
- இசைப்பயிற்சியிலும், நாட்டியத்திலும் குறிப்பிடத்தக்க ஸ்வரஜதிகளே பயன்பாட்டில் இருந்தாலும், ஐம்பதிற்கும் மேற்பட்ட ஸ்வரஜதிகள் உள்ளன.

**5. ஆய்வுமுறைமை :**

பகுப்பாய்வு முறைமைமூலம் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுத்தரவுகள் :**

பல இசை நூல்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6. விவரிப்பு :**

**ஜதிஸ்வரம், ஸ்வரஜதி இரண்டிற்கும் ஒரே ஸ்வர அமைப்பு காணப்படுதல் :-**

உதாரணம் (1):

இராகம் : பிலகரி
இயற்றியவர் : வீணை குப்பையர்

தாளம் : ஆதி

ஸா, ரி, காபா........

இந்த ஜதிஸ்வரம் மிக்க சுவைதரும் வகையில் அழகுற அமைந்துள்ளது. இந்த ஸ்வரங்களுக்குப்பின்னர் பல சாகித்தியங்கள் அமைக்கப்பட்டு ஸ்வரஜதியாகப் பாடப்பட்டு வருகிறது.

அவற்றுள்,

1. ரார வேணு கோபா பாலா......
2. வாரிஜாஸ னாதி......
3. மங்களம் ஸ்ரீ ........
4. தேவதேவா நின்னருள் தனை........

முதலியன குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் ராவேணு கோபா பாலா என்கின்ற சாகித்தியமே முதன்மையானதென பேராசிரியர். சாம்பமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டு உள்ளார்கள்.[3]இவரது நூலில் ராரவேணு..... சாகித்தியத்துடன் சேர்த்து இந்த உருப்படி ஜதிஸ்வரம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆபிரகாம் பண்டிதர் தென்னிந்திய இசை ஆரம்பப் பயிற்சிக்கென பல பாடல்களை இயற்றி "கர்ணாமிர்த சாகரத் திரட்டு" என்ற பெயரில் நூலாக பதினான்கு புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இதில் மேற்கூறிய பிலகரி இராக உருப்படி ஸ்வரஜதி என்றே கொடுக்கப்பட்டுள்ளது. "வாரும் தேவ தேவா இங்கு.." எனத் தொடங்கும் இவ் உருப்படி பல்லவி, அநுபல்லவி இல்லாமல் 6 சரணங்கள் என சியாமாசாஸ்திரிகளின் ஸ்வரஜதியின் அமைப்பில் கொடு க்கப்பட்டுள்ளது. இதில் மூன்றாவது ஸா.ரி. கா கா கா .. எனத் தொடங்கும் சரண ஸ்வரத்தில் ஐந்து சங்கதிகளும், ஐந்திற்கும் வெவ்வேறு சாகித்தியங்களும் இயற்றப்பட்டு ள்ளன [4].

**உதாரணம் (2):**

ஸ்ாஸ்ா நீதா பாமா கா

இராகம்: தோடி தாளம் : ஆதி

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஜதிஸ்வரம் தஞ்சை நால்வரால் அமைக்கப்பட்டு தஞ்சை நால்வர் நாட்டிய இசைக் கருவூலம் பொன்னையா மணிமாலை எனும் நூலில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஜதிஸ்வரம் லயவேலைப்பாடு மிகுந்த ஒரு அழகான உருப்படியாகும். சாதாரணமாக உருப்படிகளின் ஒரு ஸ்வரத்திற்கு 5, 7 கார்வைகள் அமைக்கப்படும். இந்த ஜதிஸ்வரத்தில் மூன்றாவது சரணத்தின் இரண்டாவது ஆவர்த்தனத்தில் ஸ விற்கு 11 கார்வைகள் கொடுக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வகை சிறப்பு வாய்ந்த ஸ்வர அமைப்பு 'கர்ணாமிர்த சக்கரத்திரட்டு' எனும் நூலில் ''சாகரே துயரமே'' என்ற சாகியத்துடன் ஸ்வரஜதியாக அமைக்கப்பட்டுள்ளது.

**ஜதிஸ்வரம், ஸ்வரஜதி என இரு பெயர்களாலும் குறிப்பிடப்படும் ஒரே இசை உருப்படிகள்.**

தஞ்சை நால்வரால் இயற்றப்பட்ட இராகமாலிகை ஜதிஸ்வரம் ஒன்று பொன்னையா மணிமாலையில் உள்ளது. இதில் கல்யாணி, பேகட, அடானா, சுருட்டி, தோடி ஆகிய இராகங்கள் இடம்பெற்றுள்ளன. இதே இராகமாலிகை பஞ்ச ராக ஸ்வரஜதி என்ற பெயரில் டாக்டர். எல். முத்தையா பாகவதருடைய ''சங்கீதகல்ப்பத்ரூமம்'' என்ற நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. [5] இதில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில், இந்தப் பஞ்ச இராக ஸ்வரஜதி சாகித்தியம் இல்லாமல் ஸ்வர அமைப்பை மட்டுமே கொண்டுள்ளது. இதனை இயற்றி யவர் ஸ்ரீ சுவாதிதிருநாள் மகாராஜா என்று உள்ளது.

**வீணை சேசண்ணாவின் ஸ்வரஜதிகள்:**

''வைணீக சிகாமணி'' வீணை சேசண்ணா அவர்கள் பல அரிய உருப்படிகளை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய ஸ்வரஜதி, வர்ணம், தெலுங்குக் கீர்த்தனைகள், கன்னட கீர்த்தனைகள், தில்லானாக்கள், ஆகியவை "Compositions of Vainika Sikhamani Veena Seshanna" என்ற நூலில் வெளிவந்துள்ளன. இந்நூலில் பதினொரு ஸ்வரஜதிகள் காணப்படுகின்றன. இப் பதினொன்றும் சாகித்தியம் இல்லாமல் ஸ்வரரூபமாகவே காணப்படுவது. இவ் ஆய்வில் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும். அத்துடன், வீணை சேண்ணா அவர்களுடைய இந்நூலில் ஜதிஸ்வரம் என்ற உருப்படி இயற்றப்படவில்லை.

**4. பதவர்ணத்தில் ஒரு அங்கமாக ஸ்வரஜதி:-**

கே. என்.தண்டாயுதபாணியின் ''ஆடலிசையமுதம்'' என்ற நூலில் ஜதி உட்பட ஒன்பது ஜதிஸ்வரங்களும் ஒன்பது பதவர்ணங்களும், ஒன்பது பதங்களும், ஒன்பது தில்லானாக்களும் இயற்றியுள்ளார்கள். இவர் தனியாக ஸ்வரஜதி இயற்றவில்லை. ஆனால் இவர் இயற்றிய பதவர்ணங்களில் ஒன்றான நாட்டைக்குறிஞ்சி இராகத்தில் அமைந்த ''மாமோகம் தானே மீறுதே'' என்ற உருப்படியில் ''ஸ்வரஜதி'' என்பது ஒரு அங்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதவர்ணத்தின் அங்கங்கள் பல்லவி, அனுபல்லவி, ஸ்வரஜதி, சரணம் எத்துக்கடை ஸ்வர சாகித்தியம் என்ற ஒழுங்கில் காணப்படுகின்றன.

**ஸ்வரஜதி என்ற பெயர்ப் பொருத்தப்பாடு:**

தான வர்ணங்களைக் கற்பிக்கத் தொடங்கு முன்னர் கற்பிக்கப்படும் ஸ்வரஜதி, இசைப்பயிற்சிக்கான பாட வரிசைகளில் இடம்பெறுவது, ஆடலுக்கென அமைத்தது என இருவகைப்படும். தொடக்க காலத்தில் இயற்றப்பட்ட ஸ்வரஜதிகளில் ஜதிகளும் இணைந்திருந்தமையால், ஸ்வரஜதி என்ற பெயர் பொருந்தி நின்றது. தற்போது வழக்கிலுள்ள ஸ்வரஜதிகளில் ஜதிகளைக் காண முடியவில்லை எனினும் பெயரில் மாற்றம் எதுவுமில்லை.

முக்கியமாக பதவர்ணத்தையும், ஸ்வரஜதியையும் வேறுபடுத்துவது ஸ்வரஜதிகளில் மேலதிகமாக அமைக்கப்பட்ட ஜதிகளே என்பது குறிப்பிடப்படவேண்டிய அம்சம்.

**இசைப்பயிற்சியிலும், ஆடலரங்குகளிலும் ஒரு சில ஸ்வரஜதிகளே பயன்பாட்டில் இருத்தல்**

கர்நாடக இசை ஆரம்பப் பயிற்சியில் கீதத்திற்கு அடுத்ததாகக் கற்பிக்கப்படும் ஸ்வரஜதி வர்ணத்திற்கு முதன் நிலையாகக் காட்டப்படுகிறது. இப்பயிற்சியில் பின்வரும் அட்டவணையிலுள்ள இரண்டு ஸ்வரஜதிகளே கூடுதலான பயன்பாட்டில் உள்ளன.

| இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|
| ஸாம்பசிவ கமாஸ் | ஆதி | சின்னிக்கிருஷ்ணதாசர் |
| ராவே ஆனந்தபைரவி | ஆதி | சோகனாத்ரி |

சியாமா சாஸ்திரிகளின் ஸ்வரஜதிகளின் சிறப்புக்கருதி இவர் இயற்றிய மூன்று ஸ்வரஜதிகளும் இந்தியப் பல்கலைக்கழகங்களின் பட்டமேற்படிப்பும் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருப்பது சிறப்பு.

இவற்றைவிட க.பொன்னையா, சங்கீத கலாநிதி க.பொன்னையாப்பிள்ளை, ஸ்ரீ. வி. லஷ்மி நரசிம்மன், ஆபிரகாம் பண்டிதர் ஆகியோர் இயற்றிய ஸ்வரஜதிகள் இசைப்பயிற்சிக்கேற்றவையாக உள்ளன.

நாட்டிய உலகத்து வரலாற்றிலே, தஞ்சை நால்வரின் தோற்றம் புதியதோர் சகாப்தத்தினைப் படைத்ததெனக் கூறின் அது மிகையாகாது. இன்றளவும் நிலவுகின்ற ஆடல்வகைகளின் திட்டம் இவர்களால் அறிமுகம்

செய்யப்பட்டதே ஆகும். இதன் பொருட்டு அவர்கள் படைத்த மேனப்ராப்தி, அலாரிப்பு, ஜதிஸ்வரம், பதம், வர்ணம் அல்லது ஸ்வரஜதி, தில்லானா, பதங்கள் என்ற கிரமத்தில் ஆடல் நிகழ்ச்சி அமைவதாக ஒரு முறைமை இச்சகோ தரர்களால் உருவாக்கப்பட்டதே. நிகழ்ச்சியில் முக்கிய இடத்தை “வர்ணம்” பெற்றதற்கு முன்னர் ‘ஸ்வர ஜதி’ அந்த ஸ்தானத்தை வகித்திருந்தது. சிறப்பான இத்திட்ட த்தை தஞ்சை நால்வரின் சம காலத்தவராகிய பிற நாட்டிய ஆசான்களும் வரவேற்று அதனைத் தாமும் கைக் கொண்டனர்.

ஆனால் தற்காலத்தில் தஞ்சை நால்வரின் ‘ஸ்வர ஜதிகள், க. பொன்னையாவின் உசேனி இராக ஸ்வரஜதி உள்ளிட்ட ஏனைய ஸ்வரஜதிகள் க.பொன்னையாபிள்ளை அவர்களின் பைரவி, காம்போதி, இராக ஸ்வரஜதிகள், மெலட்டூர் வெங்கட்ராம சாஸ்திரிகள், ஆதி அப்பைய்யர் ஆகியோரின் ஸ்வரஜதி ஆகியன நாட்டியத்திற்கேற்ற வகையில் சிறப்பான அமைப்பில் இருந்தாலும், பயிற்சி யிலும், ஆடல் அரங்குகளிலும் பயன்பாட்டில் அருகி வருகின்றன.

**7. முடிவுரை:**

மேற்கண்ட ஆய்வுகளின்படி பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

- ஒரே ஸ்வர அமைப்பு ஜதிஸ்வரத்திற்கும் ஸ்வர ஜதிக் கும் கொடுக்கப்பட்டுள்ளது.
- ஒரு நூலில் ஸ்வர அமைப்பு ஜதிஸ்வரம் என்றும், அதே ஸ்வரத்தொகுதி சாகித்தியத்துடன் சேர்த்து வேறு நூலில் ஸ்வரஜதி எனவும் கொடுக்கப்பட்டுள்ளது.
- வீணை சேசண்ணா அவர்கள் ஸ்வரரூபமாக இயற் றிய உருப்படியை ஸ்வரஜதி என்றே குறிப்பிட்டுள்ளார்.
- ஆடலிசையமுதத்தில் ஸ்வரமும் ஜதியும் சேர்ந்த “ஸ்வரஜதி” பதவர்ணத்தில் ஒரு அங்கமாகக் கொடுக் கப்பட்டுள்ளது.
- ஜதி + ஸ்வரம், ஸ்வரம்+ ஜதி இரண்டிலுமே ஸ்வரக் கோர்வைகளையும், சொற்கட்டுக்களையும் குறிக்கும் பதங்களே உள்ளன. ஸ்வரஜதி எனும் உருப்படியில் கூடுதலாக உள்ள சாகித்தியத்தைக் குறிப்பதாக எந்தப் பதமுமே இல்லை.

**8. ஆய்வின் பரிந்துரை:-**

ஆய்வின் பயனாகப் பின்வரும் பரிந்துரைகள் முன் வைக்கப்படுகின்றன.

- ஜதிஸ்வரத்திற்கும், ஸ்வரஜதிக்கும் ஒரே ஸ்வர அமைப்பு அமையலாம்.
- ஜதிஸ்வரமாக இயற்றப்பட்ட உருவகை பின்னால் சாகித்தியம் சேகரிக்கப்பட்டு ஸ்வரஜதியாக மாற்றப் பட்டுள்ளது.
- ஸ்வர அமைப்பை மட்டும் கொண்டிருப்பவற்றையும் ஸ்வரஜதி என்று குறிக்கப்பட்டிருந்தாலும் சாகித்தி யத்துடன் சேர்த்து அமைக்கப்பட்டதை மட்டுமே ஸ்வர ஜதி எனக் கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.
- ஆரம்பத்தில் இயற்றப்பட்ட ஸ்வரஜதிகள் ஜதிகளைக் கொண்டிருந்தமையால் ஸ்வரஜதி என்ற பெயர் பொருத்தமாக இருந்தது. சாகித்தியத்தைக் குறிப்பதாக எந்தப் பதமும் இல்லை. பதஜதி வர்ணம் என்பது போல ஸ்வரஜதி வர்ணம் எனக் குறிப்பிடுவது பொருத் தமானதாக அமையும்.
- ஸ்வரஜதிகள் இசைக்கும் ஆடலுக்கும் என இரு வகை யில் இயற்றப்பட்டுள்ளன. இவை பயிற்சி, அரங்க நிகழ்வு ஆகியவற்றிற்கு ஏற்றவையாகத் தனித் தன்மையோடு காணப்படுகின்றன.
- பயன்பாடு, பாடுபொருள், தெய்வம் அமைப்பு ஆகிய வற்றின் அடிப்படையில் பலவகை சிறப்புடன் ஸ்வர ஜதிகள் காணப்படுகின்றன.
- இத்தகைய சிறப்பு வாய்ந்த ஸ்வரஜதிகளை அழிய விடாமல் பாதுகாப்பது இசைக்கலைஞர்களதும் நடனக் கலைஞர்களதும் கடமை பயிற்சிக்கு ஒரே ஸ்வர ஜதியைக் கற்பிக்காமல் இலகுவான வேறு வேறு ஸ்வரஜதிகளைக் கற்பிக்க வேண்டும். இசை அரங்கு களிலும் நடன அரங்குகளிலும் நடைபெறும் நிகழ்வு களிலும் ஸ்வரஜதி இடம்பெறுதல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

[1] நாராயணசாமி.டி.வி, “கலையும் மொழியும்”, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை, 1980.

[2] சுப்பிரமணியன்.ச.வே.தமிழர்தோற்கருவிகள் (முன்னுரை) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980,

[3] சாம்பமூர்த்தி .P. கர்நாடகசங்கீதம், பாகம் II, Indian Music Publishing h;ouse, Chennai.

[4] Sampamoorthy, P. A Dictionary of South Indian Music and Musicians Vo.l1, Indian Music Publishing h;ouse, Chennai.

[5] முத்தையா பாகவதர் டாக்டர். எல். சங்கீத கல்ப் பத்தி ருமம், முதல்பாகம், திருவனந்தபுரம், அரசு அச்சுக் கூடம், திருவனந்தபுரம், 1977.